நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 22    [05-05-93]    புதன்கிழமை    ஓசை 76

## பயிலுநர் ஆசிரியர் பிரச்சினை; ஆறு அம்சக் கோரிக்கை சமர்ப்பிப்பு

பயிலுநர் ஆசிரியர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. இதில் கஷ்டப் பிரதேச அலவன்ஸ் வழங்கப்படல்வேண்டும், பதிலதிபராக கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியருக்கு அதிபருக்கான புதிய அலவன்ஸ் வழங்கப்படவேண்டும், 1990 யூன்முதல் டிசம்பர்வரை ஆபத்துக் காலத்துக்கான ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவேண்டும். இவ் ஆசிரியர் தெரிவு முறையில் காணப்படும் தவறான சில கொள்கைகளால் அவர்கள் விரும்பாத திறமையாக கற்பிக்கமுடியாத பாடங்களைக் கற்பிக்கவேண்டியுள்ளது. இதைத் தவிர்த்து அவர்கள் விரும்பும் பாடங்களில் பயிற்சிபெற அனுமதிக்கவேண்டும், பட்டதாரி பயி (4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தமிழர் மத்தியில் பெரும் அச்சம்;
# நாளை இனக்கலவரம் வெடிக்குமெனப் பீதி!

## தமிழ் எம். பி. பாதுகாப்பு கோருகிறார்

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நாளுக்குநாள் பதற்றம் அதிகரித்து வருவதாகவும் ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ள நாளை பெரும் கலவரம் வெடிக்கலாம் என தமிழர் மத்தியில் பெரும் அச்சம் நிலவுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து தமிழ் எம். பி. ஒருவர் பதில் ஜனாதிபதியைச் சந்தித்து தமிழருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளதாகவும் பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

கடந்த சனிக்கிழமை ஆமர் வீதிச் சந்தியில் கொல்லப்பட்ட சிறிலங்கா ஜனாதிபதியின் இறுதிக்கிரிகைகள் நாளை இடம்பெறவுள்ள அதேவேளை கொழும்பில் உள்ள தமிழருக்கெதிராக கலவரங்கள்வெடிக்கலாம் எனவும் தமிழர்கள் தாக்கப்படலாம் எனவும் பெரும் அச்சம் நிலவிவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை உணர்த்துமாப்போல் கொழும்பில் வாழைத் தோட்டப் பகுதி மற்றும் குணசிங்கபுரப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் சிலரால் மிரட்டப்பட்டுள்ளனர். இதனால் அச்சமடைந்த இப்பகுதி வாழ் தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை குறித்து பரராஜசிங்கம் பீ. பி. ஸிக்கு அளித்த தகவலில் அடுத்தஇரண்டொரு தினங்களில் தமிழர் தாக்கப்படலாம் என்ற பீதி ஏற்பட்டுள்ள காரணத்தினால் பல தமிழர்கள் தன்னிடம் தாம் இருக்கும் இடங்களில் தங்கியிருப்பது அச்சமாக உள்ளது எனக் கூறியதாக தெரிவித்தார்.

இதையடுத்தே தாம் பதில் ஜனாதிபதியை சந்தித்து அவரிடம் நிலைமையை விளக்கியதாகவும் 1983ஆம் ஆண்டு நடந்ததைப்போன்றே இப்போதும் ஏற்படலாம் என்ற அச்சநிலை தோன்றியுள்ளதை எடுத்து விளக்கியதாகவும் பரராஜசிங்கம் கூறினார்.

இதற்கு பதிலளித்த பதில் ஜனாதிபதி சகல பாதுகாப்பு ஒழுங்குகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாது தடுக்கப்படும் என்றும் தமிழரை பீதியடையாது இருக்கும்படி கேட்டுக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினை தீர்வு; மாற்றம் ஏதுமில்லை

### —டி. பி. விஜயதுங்க

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வில் சிறிலங்கா அரசின் போக்கில் எந்த மாற்றமும் இருக்காது என பதில் ஜனாதிபதி டி, பி விஜயதுங்க செய்தியாளர் ... அரசுடன் பேச முன்வர வேண்டும்'' இவ்வாறு பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பி. பி. ஸிக்கு தெரிவித்துள்

## வன்முறையில் ஈடுபட சிலகுழுக்கள் திட்டம்

### சிறிமாவோ எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட சில குழுக்கள் திட்டம் தீட்டி வருவதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதில் ஜனாதிபதி டி பீ. விஜயதுங்கவிடம் தெரிவித்துள்ளார்

எனவே தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக இன்று பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க அறிக்கையொன்றை வெளியிடலாம் என பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்தார்.

## ஜனாதிபதி பிரேமா கொலை; விசாரணையில் திடீர் திருப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி கொலை விசாரணையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்தார்.

மேலும்; தற்கொலைப் படை வீரர் ஐக்கியதேசியக் கட்சியின் வாழைத்தோட்டக் கிளையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக அங்கத்தவராக இருந்தவர். கொலை நடைபெறுவதற்குமுன்னர் வாழைத் தோட்ட கிளை சார்பாக மேதின ஊர்வலத்தில் இவர் கலந்துகொண்டு சென்று கொண்டிருந்தார்.

அப்போது பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீன் பரிச்சயம் காரணமாக அவரை அழைத்தார். அப்பொழுது அவர் பிரேமதாசாவை நெருங்கிச் சென்று குண்டை வெடிக்க வைத்தார் என தனக்கு தகவல் கிடைத்ததாக தெரிவித்தார்.

மேலும்; சைக்கிளில் வந்த இளைஞருக்கும் இந்தக் கொலைக்கும் எதுவித தொடர்புமில்லை என பொலிசார் தெரிவித்ததாக ஐவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கொலை தொடர்பாக மீட்கப்பட்ட தற்கொலைப்படை வீரரின் தலையைக்கொண்டு அவரை அடையாளம் காணமுடியவில்லை என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தற்கொலைப்படை வீரரை பிரேமா அறிந்திருந்தார்

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையில் ஈடுபட்ட தற்கொலைப்படை வீரர் பிரேமதாசாவின் சிறிசுசரித்த இல்லத்திற்கு அடிக்கடி சென்றுவந்தவரென்றும், இவர் பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்கொலைப்படை வீரரின் பெயர் குமாரகுலசிங்கம் எனவும், சுமார் 24 வயதை உடைய இவர் குருநகரைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனுடன் நெருங்கியதொடர்பை இவர் கொண்டிருந்ததால் பிரேமதாசாவின் நடவடிக்கைகளை

## சிங்கள வர்த்தகர் கொழும்பில் கைது!

வீதிச் சந்தியில் கொல்லப்பட்ட சிறிலங்கா ஜனாதிபதியின் இறுதிக்கிரிகைகள் நாளை இடம்பெறவுள்ள அதேவேளை கொழும்பல் உள்ள தமிழருக்கெதிராக கலவரங்கள்வெடிக்கலாம் எனவும் தமிழர்கள் தாக்கப்படலாம் எனவும் பெரும் அச்சம் நிலவிவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை உணர்த்துமாப்போல் கொழும்பில் வாழைத் தோட்டப் பகுதி மற்றும் குணசிங்க மக்கள் சிலரால் மிரட்டப்பட்டுள்ளனர். இதனால் அச்சமடைந்த இப்பகுதி வாழ் தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை குறித்து பரராஜசிங்கம் பீ. பி. ஸிக்கு அளித்த தகவலில் அடுத்தஇரண்டொரு தினங்களில் தமிழர் தாக்கப்படலாம் என்ற பீதி ஏற்பட்டுள்ள காரணத்தினால் பல தமிழர்கள் தன்னிடம் தாம் ருப்பது அச்சமாக உள்ளது எனக் கூறியதாக தெரிவித்தார்.

இதையடுத்தே தாம் பதில் ஜனாதிபதியை சந்தித்து அவரிடம் நிலைமையை விளக்கியதாகவும் 1983ஆம் ஆண்டு நடந்ததைப்போன்றே இப்போதும் ஏற்படலாம் என்ற அச்சநிலை தோன்றியுள்ளதை ராஜசிங்கம் கூறினார்.

இதற்கு பதிலளித்த பதில் ஜனாதிபதி சகல பாதுகாப்பு ஒழுங்குகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாது தடுக்கப்படும் என்றும் தமிழரை பீதியடையாது இருக்கும்படி கேட்டுக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினை தீர்வு; மாற்றம் ஏதுமில்லை

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வில் சிறிலங்கா அரசின் போக்கில் எந்த மாற்றமும் இருக்காது என பதில் ஜனாதிபதி டி, பி விஜயதுங்க செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழர்களின் அபிலாசைகள் குறித்து அவர்களுடனேயே பேசத்தயார் ஆனால் அவர்கள் ஜனநாயக வழிமுறைகளை கையாண்டே

–டி. பி. விஜயதுங்க

அரசுடன் பேச முன்வர வேண்டும்'' இவ்வாறு பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

வன்செயல்களுக்கு மத்தியில் வாழ இப்போது அரசியல் வாதிகள் பழக்கப்பட்டுவிட்டனர் என்றும் பதில் ஜனாதிபதி விஜயதுங்க பி. பி. ஸிக்கு மேலும் தெரிவித்தார்.

## வன்முறையில் ஈடுபட சிலகுழுக்கள் திட்டம்

(கொழும்பு)

### சிறிமாவோ எச்சரிக்கை

கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட சில குழுக்கள் திட்டம் தீட்டி வருவதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதில் ஜனாதிபதி டி பீ. விஜயதுங்கவிடம் தெரிவித்துள்ளார்.

எனவே தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக இன்று பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க அறிக்கையொன்றை வெளியிடலாம் என பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்தார்.

## இறுதிக் கிரியைகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள இன்று முதல் வெளிநாட்டு தலைவர்களும், உயர்மட்டக் குழுக்களும் கொழும்பு வந்து சேரவுள்ளனர். பங்களாதேஷ் பிரதமர், பாகிஸ்தான் இடைக்கால பிரதமர், அமெரிக்க வர்த்தக அமைச்சர், சீனதொலை தொடர்பு அமைச்சர், ஜப்பானிய முன்னாள் பிரதமர் கைபூ. பூட்டான் மகாராணி மற்றும் மாலைதீவு, இந்தோனேசியா, தென்கொரியா, அவுஸ்திரேலியா உயர்மட்டக் குழுவினர் இன்று கொழும்பு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பதாக பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்தார்.

மேலும்; தற்கொலைப் படை வீரர் ஐக்கியதேசியக் கட்சியின் வாழைத்தோட்டக் கிளையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக அங்கத்தவராக இருந்தவர். கொலை நடைபெறுவதற்குமுன்னர் வாழைத் தோட்ட கிளை சார்பாக மேதின ஊர்வலத்தில் இவர் கலந்துகொண்டு சென்று கொண்டிருந்தார்.

அப்போது பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீன் பரிச்சயம் காரணமாக அவரை வல் கிடைத்ததாக தெரிவித்தார்.

மேலும்; சைக்கிளில் வந்த இளைஞருக்கும் இந்தக் கொலைக்கும் எதுவித தொடர்புமில்லை என பொலிசார் தற்கொலைப்படை வீரரின் தலையைக்கொண்டு அவரை அடையாளம் காணமுடியவில்லை என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தற்கொலைப்படை வீரரை பிரேமா அறிந்திருந்தார்

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையில் ஈடுபட்ட தற்கொலைப்படை வீரர் பிரேமதாசாவின் சிறிசுசரித்த இல்லத்திற்கு அடிக்கடி சென்றுவந்தவரென்றும், இவர் பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்கொலைப்படை வீரரின் பெயர் குமாரகுலசிங்கம் எனவும், சுமார் 24 வயதை உடைய இவர் குருநகரைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனுடன் நெருங்கியதொடர்பை இவர் கொண்டிருந்ததால் பிரேமதாசாவின் நடவடிக்கைகளை நன்கு அறிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ஆலோசகர் மொகைதீனின் வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் அங்கிருந்த புகைப்பட அல்பத்தை எடுத்துச் சென்று இரகசியப் பொலிசா

[4ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கள வர்த்தகர் கொழும்பில் கைது!

### பிரேமா கொலையுடன் தொடர்பாம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக சுஜீவன் என்னும் சிங்கள இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 'இவர் ஒரு வர்த்தகர்' எனவும் பொலிஸ் உயர் அதிகாரி லயனல் குணதிலகசெய்தியாளருக்குத்தெரிவித்தார்.

இக்கொலை தொடர்பாக மேலும் பல வர்த்தகர்கள் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

[4ஆம் பக்கம் பார்க்க]

# புதிய ஜனாதிபதி தெரிவு; 7ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டதையடுத்து அரசியல் யாப்பிற்கு இணங்க நேற்றுக்காலை பாராளுமன்றத்தின்விசேடகூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டம் ஐந்துநிமிடங்கள் மட்டும் நீடித்தது. புதிய ஜனாதிபதியை நேற்று தெரிவுசெய்வதாக முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தினத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை 7ஆம் திகதிவரை ஒத்திப் போடுவதுஎன நேற்றுஅறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பை பாராளுமன்ற செயலாளர் விடுத்தார்.

இதன் பொருட்டு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அடுத்த தினமான வெள்ளி காலை 9.00 மணிக்கு பாராளுமன்றம்மீண்டும்கூடும். இதில் ஒன்றிற்கு மேற்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால் உறுப்பினரின் இரகசிய வாக்கெடுப்பு மூலம் புதிய ஜனாதிபதி தெரிவாவார். ஒரேயொரு வேட்பாளரே நிறுத்தப்பட்டிருந்தால் அவரே புதிய ஜனாதிபதியாக போட்டியின்றி தெரிவாவார்.

தற்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட ஆளும் ஐ தே. க. தனது வேட்பாளராக டி.பி. விஜயதுங்காவை நியமித்துள்ளது. எதிர்க்கட்சிகள் தமது வேட்பாளரை இதுவரை நிறுத்தவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜே. ஆர் சிறிமாவோ அஞ்சலி

காலஞ்சென்ற பிரேமதாசாவிற்கு முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா திருமதி ஜெயவர்த்தனா மற்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் நேற்று தமது அஞ்சலியைச் செலுத்தினர். தற்போது ஜனாதிபதி

[4ஆம் பக்கம் பார்க்க]

# எதிரணி கூட்டத்தில் குழப்பம் 1000பேர்பொலிசாரால்கைது

## ஒருவர் பலி; பலர் படுகாயம்

தென்பகுதியில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டமொன்றில் ஏற்பட்ட குழப்பமொன்றில் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாக சுமார் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர் என ஐலண்ட் பத்திரிகையை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

மேற்படி கூட்டத்தை ஒரு குழுவினர் குழப்பமுயன்றதாகவும் அப்போது அங்கு ஏற்பட்ட சன நெரிசலிலேயே ஒருவர் பலியாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிசார் சுமார் ஆயிரம் பேரைக் கைது செய்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# பாராளுமன்றம் கூடுமுன் கட்டடத்தில் தீவிரசோதனை

(கொழும்பு)

சிறிலங்காப் பாராளுமன்றக் கட்டடம் முழுவதையும் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பலமணிநேரம் சல்லடை போட்டு தேடுதல் நடாத்தினர்.

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வேட்பாளர் மனுவை ஏற்பதற்காக நேற்று பாராளுமன்றம் கூடியது தெரிந்ததே. இப்பாராளுமன்றம் கூடுவதற்கு சிலமணிநேரங்களுக்கு முன்னர் இப்பகுதியை முற்றுகையிட்ட படையினர் பாராளுமன்ற கட்டடங்களின் உட்புறத்தில் பொதுமக்கள் கலரி, பத்திரிகையாளர் கலரி, உட்பட அனைத்து பகுதிகளும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது இப்பகுதிகளில் குண்டுகள் எதாவது மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே படையினர் வெடிமருந்துப் பொருள்களை கண்டுபிடிக்கும் இயந்திரங்களின் உதவியுடன் இச்சோதனையை நடாத்தியதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்பின்னரே பாராளுமன்றம்கூடியது குறிப்பிடத்தக்கது.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனை செலுத்தமுடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

# 'ஷெல்'லை உடைத்த இளைஞர் உடல்சிதறிப் பலி

## மேலும் இரு சிறுவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பழைய இரும்புக் கடை ஒன்றினுள் கிடந்தெடுத்த வெடிக்காத ஷெல் ஒன்றை சுத்தியல் குறடு கொண்டு அடித்து உடைக்க முயன்றவர் அது வெடித்ததில் உடல் சிதறிப் பலியானார். அவர் இருந்த வீடும் சேதமடைந்தது.

இப் பரிதாபசம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் இடம்பெற்றது. இதன்போது குற்றாளம் சுரேந்திரன் [வயது15] என்னும் பாடசாலை மாணவனே பலியானவராவார். மேலும் குற்றாளம் கிருபா [வயது8] சிவபாதசுந்தரம் வினிசா [வயது2] என்னும் சிறுவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும்

[3ஆம் பக்கம் பார்க்க]

## 'சுதந்திரப் பறவைகள்' வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் வைகாசி இதழ் இன்று வெளிவருகின்றது. இதுவரை சஞ்சிகையாக வெளிவந்துகொண்டிருந்த சுதந்திரப் பறவைகள் இம்முறை செய்திப்பத்திரிகை வடிவில் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை சீதனமும் பெண்களும், உழைக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பழைய பொருள்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்ட சுவர் மணிக்கூடுகள், நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால். உங்கள் பழைய சுவர்மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது. வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும் டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [6542]

### கசற் ரேடியோக்களா! கடிகாரமா!!

உங்கள் கடிகாரங்களையும் ரேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6541)

### உடன் விற்பனைக்குண்டு

கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்கு உண்டு 'மல்லிாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (4819)

### சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சி திரு. வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பூஜை, பஜனை, சொற்பொழிவு மற்றும் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [யோ]

### 44-வது ஆண்டு நிறைவு விழா

(நல்லூர்)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் இன்று புதன்கிழமை தனது 44-வது ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ளது.

காலை ஆறுமணியளவில் நடைபெறும் ஐந்து மைல் தூர மரதன் ஓட்டப்போட்டியுடன் ஆரம்பமாகும் இவ் விழாவில், பிற்பகல் 2.00மணியளவில் விளையாட்டுப்போட்

---

## 1993ஆம் ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

**மருதங்கேணி வட்டம்:**

1-ம் இடம் -சிவஞானம் நவமணி- குடத்தனை மேற்கு.

2-ம் இடம் - கணபதிப்பிள்ளை கந்தசபேசன்- அம்பனை.

3-ம் இடம் -சுப்பிரமணியம் செல்வகிருஷ்ணன்- உடுத்துறை தெற்கு, தாளையடி.

**ஆறுதல் பரிசு:**

1. சின்னையா வைத்திய சூரர் - வத்தராயன் தெற்கு, தாளையடி.
2. ஆழ்வாப்பிள்ளை யோகநாதன் -வத்தராயன் தெற்கு தாளையடி
3. ஏரம்பு செல்வரத்தினம்- ஆஸ்பத்திரியடி, அம்பனை.
4. பரிமேலழகர் தயானந்தன் -நெல்லியான், செம்பியன்பற்று தெற்கு.
5. முத்தையா திருச்செல்வம்- செம்பியன்பற்று தெற்கு.
6. ராசா சிவபாக்கியம் - நாகர் கோவில் தெற்கு.
7. பொன் கிட்டினன்-குடத்தனை மேற்கு.
8. நடராஜா சுந்தரம் ஜெயக்குமார் - செம்பியன் பற்று தெற்கு.
9. பொன்னம்பலம் ஜானகி- குடத்தனை கிழக்கு.
10. வினாசித்தம்பி ரவிக்குமார்- நாகர்கோவில் தெற்கு.

**பளை வட்டம்:**

1-ம் இடம்-முத்தையா சின்னத்துரை - வேம்போடு கேணி, பளை.

2-ம் இடம் - ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் -வேம்போடுகேணி, பளை.

3-ம் இடம் - கிருஷ்ணன் ராசரத்தினம் -மாசார், பளை.

**ஆறுதல் பரிசு:**

1. முத்தையா பொன்னுத்துரை -வேம்போடுகேணி பளை.
2. சேனாதிராசா செல்வயோகன் -பெரிய பளை பளை.
3. நமசிவாயம் சின்னத்துரை -பளை.
4. இலகுப்பிள்ளை குமாரசாமி-பேராவளை, பளை
5. சிதம்பரநாதன் கனகசிங்கம் -மாசார் பளை.
6. குமாரசாமி ராஜேஸ்வரி- முல்லையடி, பளை.
7. குமாரசாமி ரவீந்திரன்- பெரிய பளை பளை.
8. இராமச்சந்திரன் ராமகுமார் -பெரிய பளை, பளை.

**கொடிகாமம் வட்டம்:**

1-ம் இடம் - இராசையா கலாவதி - ராமாவில், கொடிகாமம்.

2-ம் இடம் - ஆனந்தசிங்க ஈவா - கெற்பலி மேற்கு, மிருசுவில்.

3-ம் இடம் - சின்னையா கந்தசாமி - கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி.

**ஆறுதல் பரிசு:**

1. பழனி ஞானமகாராசா- தச்சன்காடு, கெற்பலி.
2. கோவிந்தன் சின்னத்தம்பி - இயற்றாலை, வரணி.
3. தம்பு கந்தையா - கண்டி வீதி, கொடிகாமம்.
4. செல்வன் வல்லிபுரம் - 1-ம் கட்டை, அங்கிளி வீதி, கெற்பலி.
5. நல்லதம்பி கனகலிங்கம்- படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.
6. வைத்திலிங்கம் சரவணமுத்து - ஒட்டங்கேணி, கொடிகாமம் தெற்கு.
7. மணி ராமநாதன் - இல. 26, கேடல் நகர், கெற்பலி.
8. சின்னையா நடராஜா - கச்சாய் தெற்கு.
9. வேலாயுதம் பாலச்சந்திரன் - விடத்தலை, பளை, மிருசுவில்.
10. ஆசீர்வாதம் ஸ்பம்பதி - வெள்ளைபோக்கட்டி, கொடிகாமம்.

**சாவகச்சேரி வட்டம்:**

1-ம் இடம் - சின்னப்பொடியன் இரத்தினம் -கைதடி வடக்கு

2-ம் இடம் -விநாயகமூர்த்தி வேலுப மயிலும்- மீசாலை கிழக்கு

3-ம் இடம்-நடராசா அருட்சோதிவர்ணன் - சங்கத்தானை.

**ஆறுதல் பரிசு:**

1. திருஞானசம்பந்தன் நிதர்சன் - நாவற்குழி, கைதடி.
2. நாகமணி சண்முகம் - மறவன்புலோ, சாவகச்சேரி.
3. இராமலிங்கம் செல்லையா -கைதடி மேற்கு, 1-ம் வட்டாரம்.
4. கந்தையா நடராசா ஈஸ்வரி இல்லம், சந்தி, கைதடி.
5. குமாரசாமி ஜெயமுருகன் மீசாலை கிழக்கு.
6. கந்தையா பாலமுருகன்- மீசாலை கிழக்கு.
7. கனகசபை தெய்வேந்திரன் - மீசாலை கிழக்கு.
8. வீ. ஜெயசிங்கம் - பேரம்பலம் வீதி, பெரிய மாவடி, கோயிற்குடியிருப்பு. சாவகச்சேரி.

---

## லலித்தின் இதயத்தையல்ல ஜனநாயகத்தைத் தாக்கியது

-காமினி இரங்கலுரை

[கொழும்பு]

லலித்தின் இதயத்தைத் துளைத்துச் சென்ற துப்பாக்கி ரவை ஜனநாயகத்தை தாக்கிய ரவையாகும் என்று காமினி திசாநாயக்கா குறிப்பிட்டார்.

லலித்தின் இறுதிக் கிரியைகள் கனத்தை பொதுமயானத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்திய காமினிதிசாநாயக்கா மேலும் கூறுகையில், அத்துலத் முதலி துணிச்சல் மிக்க ஒரு நபராவார். தனது இலட்சியங்களுக்காகவே அவர் வாழ்ந்தார். மக்கள் எந்த விதமான அச்சமுமின்றி வாழக்கூடிய ஜனநாயக சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்காக அவர் உழைத்தார். அவர் அதற்காகவே டி.யு.என் எப். என்னும் கட்சியை ஆரம்பித்தார். அவர் இந்நாட்டின் சொத்து. அவரது மறைவுபேரிழப்பு ஆகும் என்றும் தெரிவித்தார்.

### பதவி உயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்டத்தில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு.ச. சின்னத்தம்பி அவர்களின் இடத்திற்கு புதிதா உசன் கொத்தணி அதிபராக இருந்த திரு. க பேரம்பலம்அவர்கள் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். இதே வேளை உசன் கொத்தணி அதிபராக திரு. வரதராஜா அவர்கள் நியமனம் பெற்றுள்ளார்.(86)

## பரிசுப் புத்தகங்கள் கைக்குட்டையாக மாறின

[கொழும்பு]

ஹொங்ஹொங்கிலிருந்து வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பரிசு நூல்கள் கொண்ட பொதிகள் கைக்குட்டைகளாக மாறிப் போயுள்ளமை சுங்கப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மோசடியில் சம்பந்தப்பட்ட வர்த்தகருக்கு ஒரு கோடி ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை இனப்பிரச்சினை இல. மக்கள் பிரச்சினையே

– அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை இலங்கை மக்களது பிரச்சினையே ஆகும் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திருமதி தெரசிட்டா ஸ்காப்பர் கூறியுள்ளார்.

கொழும்பில் கடந்த ஞாயிறன்றுவட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இதனை இலங்கை மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். வேறு யாராவது வந்து தீர்த்து வைப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இங்குள்ள மக்கள் ஒவ்வொருவரும் முழு மனதுடன் பாடுபடல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## தனது இரத்தத்தால் அவதூறுகளை துடைத்தார்

– ஈ.பி.டி.பி இரங்கல் செய்தி

(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் சகலராலும் நேசிக்கப்பட்ட ஒரே தலைவர் என்ற பெயரோடு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பாஸிஸ எதிர்ப்பு போரில் தனது உயிரையும் ஈந்துள்ளார் என்று ஈ.பி.டி.பி கூறியுள்ளது.

பிரேமதாசாவின் மறைவு தொடர்பாக விடுத்த அனுதாபச் செய்தியில், அக்குழுவினர் மேலும் கூறுகையில், தன் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளையும் தனது இரத்ததை

...நேர்மையை வெளிப்படுத்தியிருக்கின்றார் என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

### ஒத்தி வைப்பு

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தினரால் இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர் வரும் ஜூன் 5ஆம் திகதிக்கு ஒத்திவைககப்படடிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில்

---

சட்டமா அதிபரிடம்

## தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

வகுப்புகளில் கலந்துகொண்டது, சுவரொட்டிகளை ஒட்டியது போன்ற குற்றச் சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே வி. பியினரை வழக்குகளிலிருந்து விடுவித்து விடுதலை செய்வது போல தமிழ்க் கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை புதிய சிறைச் சாலையில் 440 தமிழ்க் கைதிகளும், கொழும்பு மகசீன் சிறையில் 403 தமிழ்க் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நடாத்திய தேடுதல்களில் 14, 15 வயதுக்கு உட்பட்டவர்கள் கூட கைதுசெய்யப்பட்டு, புலிகளுக்கு உணவு வழங்கியது, நிதி உதவி வழங்கியது போன்ற குற்றஞ் சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வாக்குச்சாவடிக்கு ஒரு முறை வேட்பாளர் செல்லலாம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு அரசியலகட்சியினதும் வேட்பாளர்கள் ஒரு வாக்குச் சாவடிக்கு ஒரு முறைக்குமேல் வருவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்றும், கட்சி ஆதரவாளர்கள் வாக்கு சாவடிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், வாக்களித்தவர்கள் எக் காரணம் கொண்டும் அங்கு தாமதிக்க இடம் அளிக்கப்பட மாட்டாது என்றும் இவற்றை தலைமைத் தேர்தல் உத்தியோகத்தர் அமுலாக்க வேண்டும் என்றும் தேர்த்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் தலைமைத் தேர்தல் உத்தியோகத்தரின் உத்தரவுகளை காவலிலுள்ள பொலிசார் அமுலாக்க வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்குச் சாவடிகளுக்கு அரைக் கிலோமீட்டர் தூர எல்லைக்குள் கட்சிகளின் சுவரொட்டிகள் ஒட்டுவது, கூட்டமாக நிற்பது, கூட்டம் நடத்துவது, பேசுவது என்பனவும் தடைசெய்யப்பட்டிருக்கும். அத்துடன் சுதந்திரமான வகையில் நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு தேர்தல் சட்டங்கள் அனைத்தையும் சரியாக அமுல்படுத்தும்படியும், மக்கள் எதுவித பீதியுமின்றி சுதந்திரமாக வாக்களிக்க வரும் சூழலை உருவாக்கும்படியும் தேர்தல் திணைக்களம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

வவுனியா வைத்தியசாலையில்

## துர்நாற்றம் வீசும் சடலம் குளிரூட்டி இல்லையாம்

(வவுனியா)

வவுனியாவில் இருக்கும் அரசினர் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் குளிர் ஊட்டி சாதனங்கள் சரிவர இயங்காமையினால் சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகின்றது.

குளிரூட்டி சாதனங்கள் செயற்படாமையினால் சவ அறையில் வைக்கப்பட்டிருக்கும் சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும், அடையாளம் காணமுடியாத அளவுக்கு சடலங்கள் சேதமடைந்து போவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-05

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கிண்ணியா பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கொலை செய்யப்பட்ட-

மத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சி திரு. வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பூஜை, பஜனை, சொற்பொழிவு மற்றும் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [யோ]

## 44-வது ஆண்டு நிறைவு விழா

(நல்லூர்)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் இன்று புதன்கிழமை தனது 44-வது ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ளது.

காலை ஆறுமணியளவில் நடைபெறும் ஐந்து மைல் தூர மரதன் ஓட்டப்போட்டியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில், பிற்பகல் 2.00மணியளவில் விளையாட்டுப்போட்டிகளும், இரவு 7 00மணியளவில் கலை நிகழ்ச்சிகளும், பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.

கலை நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக நிலையக் கலைஞர்கள் வழங்கும் ''கைலை வன்னியன்'' என்ற முழுநீள சரித்திர நாடகமும் மேடையேற்றப்படவுள்ளது.

## அறவழிக்கு பாராட்டு

இராணுவ வன்முறைகளினால் குடும்பத்தலைவர்களை இழந்து தமது கல்வியைத் தொடர முடியாத நிலை இருந்தபோது அவர்களுக்கு உதவிபுரிந்த அறவழியின் சேவையை என்றும் மறக்க முடியாது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கைதடி நுணாவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு. நலங்கிளி தெரிவித்தார்.

அறவழி மாணவர்களின் விடுமுறைகாலச் சந்திப்பில் சிறப்பு விருந்தினராக கலந்து கொணடு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:- போராட்டச்சூழலில் அறவழிப்போராட்டக்குழு ஆற்றுகின்ற பணி மகத்தானது அதிலும் மாணவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றுகின்ற பணி எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியது. இன்று அறவழிப் போராட்டக் குழுவினால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற கல்வித் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு பல தமிழ் மாணவர்கள் இணைததுககொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட ஒவ்வொரு மாணவர்களுக்கும் அறவழிப் போராட்டக்குழுவினால் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

3-ம் இடம் - கிருஷ்ணன் ராசரத்தினம் -மாசார், பளை.

### ஆறுதல் பரிசு:

1. முத்தையா பொன்னுத்துரை -வேம்போடுகேணி பளை.
2. சேனாதிராசா செல்வயோகன் -பெரிய பளை பளை.
3. நமசிவாயம் சின்னத்துரை -பளை.
4. இலகுப்பிள்ளை குமாரசாமி-பேராவளை, பளை
5. சிதம்பரநாதன் கனகசிங்கம் -மாசார் பளை.
6. குமாரசாமி ராஜேஸ்வரி-முல்லையடி, பளை.
7. குமாரசாமி ரவீந்திரன்-பெரிய பளை பளை.
8. இராமச்சந்திரன் ராமகுமார் -பெரிய பளை, பளை.
9. சின்னத்தம்பி சச்சிதானந்தம்-முல்லையடி பளை
10. வேலுப்பிள்ளை துரைசிங்கம் -அரசர் கேணி, பளை.

### ஆறுதல் பரிசு:

1. திருஞானசம்பந்தன் நிதர்சன் - நாவற்குழி, கைதடி.
2. நாகமணி சண்முகம் - மறவன்புலோ, சாவகச்சேரி.
3. இராமலிங்கம் செல்லையா -கைதடி மேற்கு, 1-ம் வட்டாரம்.
4. கந்தையா நடராசா ஈஸ்வரி இல்லம், சந்தி, கைதடி.
5. குமாரசாமி ஜெயமுருகன் மீசாலை கிழக்கு.
6. கந்தையா பாலமுருகன்-மீசாலை கிழக்கு.
7. கனகசபை தெய்வேந்திரன் - மீசாலை கிழக்கு.
8. வீ. ஜெயசிங்கம் - பேரம்பலம் வீதி, பெரிய மாவடி, கோயிற்குடியிருப்பு. சாவகச்சேரி.
9. நடராஜா நந்தகுமார் மீசாலை கிழக்கு.
10. பரமானந்ததேவி மயில்வாகனம் -உதயதாரகை கைதடி மத்தி.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். விசுவாசம்

(பொன்னுத்துரை சுதாகரன்)

தாயின் மடியில் 1975-01-28 | தாயக மண்ணில் 1991-04-28

துஞ்சிடும் மாந்தர்கள் துன்பங்கள் கண்டுமே
துள்ளி எழுந்தாயே - துயர்
மிஞ்சிட பள்ளியை மறந்திட்டு
பாசறை சென்றாயே
வென்றிடும் புலிவீர படையினில்
வெற்றிகள் நீ கண்டாய் - வீரம்
குன்றிடா மனம் கொண்ட
தலைவனின் கொள்கையில் நீ இணைந்தாய்
விஞ்சிய புகழுடன் வீரங்கள் புரிந்துமே
கஞ்சரை வென்றாயே - புகழ்
மிஞ்சிவிடும் தமிழ் ஈழம் மீட்டிட மாண்டாயே
என்றுமே உந்தன் நினைவுகள் வற்றாது
நினைவில் நீ எவ்வேளையிலும் வாழ்ந்திடுவாய்.

துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
அக்காமார், அத்தான்மார்
மருமக்கள்மார், உறவினர்கள்.

இல. 81,
2-ம் யூனிற்,
வவுனிக்குளம்.

[சி-6563]

பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில்

மனதுடன் பாடுபடல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## தனது இரத்தத்தால் அவதூறுகளை துடைத்தார்

— ஈ.பி.டி.பி இரங்கல் செய்தி

(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் சகலராலும் நேசிக்கப்பட்ட ஒரே தலைவர் என்ற பெயரோடு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பாஸிஸ எதிர்ப்பு போரில் தனது உயிரையும் ஈந்துள்ளார் என்று ஈ.பி.டி.பி கூறியுள்ளது.

பிரேமதாசாவின் மறைவு தொடர்பாக விடுத்த அனுதாபச் செய்தியில், அக்குழுவினர் மேலும் கூறுகையில், தன் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளையும் தனது இரத்ததததை சிந்தியதன் மூலம் துடைத்தழித்து தனது அரசியல் நேர்மையை வெளிப்படுத்தியிருக்கின்றார் என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## ஒத்தி வைப்பு

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தினரால் இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர் வரும் ஜூன் 5ஆம் திகதிக்கு ஒத்திவைககப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் நிலையத்தின் மெய் வல்லுநர் போட்டியும் இடம் பெறவுள்ளது.

## அறிவித்தல்

சகலபாவனைக்கும் உரிய கயிறுகள் எம்மிடம் உண்டு. மொத்தமாக நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்கட்கு:
யாழ் மா/வட்ட சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்
இல. 10, ஐயனார் கோவில் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(4817)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
20 08-1924

உதிர்வு:
05-05-1991



### அமரர் அந்தோனி சவிரி

என்றும் எம் நினைவில் நிலைத்திருக்கும் உங்களின் ஆன்மா நித்தியபேரின்ப பாக்கியத்தில் சேர இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

156-ம் கட்டை,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

[4768]

## குளிரூட்டி இல்லையாம்

(வவுனியா)

வவுனியாவில் இருக்கும் அரசினர் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் குளிரூட்டி சாதனங்கள் சரிவர இயங்காமையினால் சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகின்றது.

குளிரூட்டி சாதனங்கள் செயற்படாமையினால் சவ அறையில் வைக்கப்பட்டிருக்கும் சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும், அடையாளம் காணமுடியாத அளவுக்கு சடலங்கள் சேதமடைந்து போவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-05

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கிண்ணியா பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கொலை செய்யப்பட்ட-

**லெப். குரு** (ஞானப்பிரகாசம் கலாமோகனராசா-தம்பலகாமம் - திருமலை)

**2-ம் லெப். உதயன்** (வடிவேல் பிரபாகரன்- புதுக்குடியிருப்பு - திருமலை)

1988ஆம் ஆண்டு துணுக்காயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**றோகான்** (தவலிங்கம் ரவிச்சந்திரன் - பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை- யாழ்.)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அப்பகுதி மருத்துவமனையில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளி.

1991ஆம் ஆண்டு வவுனியா கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கஜன்** (வீரபத்திரன் மந்திரிகுமார் - சம்பூர், மூதூர்- திருமலை)

**2-ம் லெப். வினிஸ்ரன்** (அருளானந்தம் சில்வா செபஸ்ரியான் சில்வா - பெரியநாவற்குளம், திருக்கேதீஸ்வரம் - மன்னார்)

**ஜெராட்-ஜெனால்ட்** (தம்பையா பிருதுவிராஜ்- மருதங்கண்டு, கரவெட்டி கிழக்கு- யாழ். )

யாழ் கொடிகாமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**பெரியவன்** (பொன்னுத்துரை சந்திரலிங்கம் - 5-ம் படிவம், பாவற்குளம், வவுனியா)

மட்டு - பெரிய போரதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுபகுமார்** (சிங்கநாயகம் சிவராசா - கோட்டைக் கல்லாறு 01- மட்டு. )

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1992ஆம் ஆண்டு வவுனியா - நொச்சிமோட்டை - மாமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**லெப். ஜெகதீஸ்வரன்** (பரமசிவம் ஜெயசீலன் - தவசிக்குளம் - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6562)

### சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பைத் தொடங்கும் நாடு ஒவ்வொன்றும் தற்காப்புக்காகத் தான் நடவடிக்கை எடுப்பதாக சாதிப்பது வழக்கம்.

- ஜவஹர்லால் நேரு


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## மறைந்துபோன போலியான மரபுகள்

சிறிலங்கா ஜனாதிபதி கொல்லப்பட்ட போது சிங்களமக்களின் ஒருபகுதியினர் பட்டாசு கொளுத்தி சந்தோசம் கொண்டாடியுள்ளார்கள் என்றால், ஏதோ ஒரு விதத்தில் மனிதாபிமானத்தையும் மீறும் அளவில் அவர் அம் மக்களுக்குக் கெடுதல் விளைவித்துள்ளார் என்பதே பொருளாகும். ஒரு தலைவரை மக்களின் ஒரு பகுதியினர் வெறுக்கலாம், ஆனால், அவரின் மரணத்தில் சந்தோசம் அடைவதென்பது வெறுப்பின் உச்சம் என்றே சொல்லவேண்டும்.

திரு. பிரேமதாசாவின் மரணம் மனிதாபிமானத்திற்கும் அப்பால் ஒரு பகுதியினரால் வரவேற்கப்பட்டது என்பது ஒருபுறம் இருக்க, சிறிலங்காவின் 'ஜனநாயகம்' எந்தளவிற்கு கீழ்நிலைக்குச் சென்றுவிட்டது என்பதையும் காட்டுவதாக இருந்தது. ஜனாதிபதி பிரேமதாசா தான் கடைப்பிடித்த வன்முறை வழிக்கு தானே பலியாக வேண்டி வந்ததாயினும், அவர் இறந்தவுடன் எதிர்க்கட்சிகள் ஒப்புக்குத்தானும் கவலையும், கண்டனமும் தெரிவிக்கவில்லை.

'ஜனநாயக மரபில்' ஒரு கட்சித் தலைவரோ அன்றி நாட்டின் தலைவர் கொல்லப்படும் போது அன்றி மரணமடையும் வேளையில் இரங்கல் தெரிவிப்பதும், கொலையாயின் கண்டனம் தெரிவிப்பதும் எதிர்க்கட்சிகளின் வழமையான நடவடிக்கையாகும். ஆனால், சிறிலங்கா அரசியலைப் பொறுத்து ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டமைக்கு ஒப்புக்கேனும் கவலையும், கண்டனமும் தெரிவிப்பதற்கு மூன்று நாட்கள் சென்றன. சனிக்கிழமை பிரேமதாசா கொல்லப்பட்ட போதும், திங்கட்கிழமையே தமது கவலையையும், கண்டனத்தையும் எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

போலித்தனமான இவ் 'ஜனநாயக மரபு' தனியாக பிரேமதாசாவின் மரணத்தின் போது மட்டும் உடைபட்டுப்போகவில்லை. அதற்கு முன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டபோதே உடைபட்டு விட்டது. எதிர்க்கட்சிகள் நாட்டின் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்த அனுமதி மறுத்ததில் இருந்தே அதை உடைத்து விட்டனர். இந்நிலையானது, பிலிப்பைன்ஸிற்கு அந் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மாக்கோசின் சடலத்தைகொண்டு

# ராடார் கண்காணிப்பை மீறி கிளைடர் விமானம் பறக்குமா?

**-தி. மு. க. கேள்வி**

(சென்னை)

சென்னைக்கு அருகே தாம்பரத்தில் இருக்கும் விமானப் படைத் தளத்தின் ராடார் கண்காணிப்பையும் மீறி கிளைடர் ரக விமானம் ஒன்று தமிழக முதல்வரின்இல்லத்தின் மீது பறந்திருக்க முடியுமா என்று தி.மு.க.கேள்விஎழுப்பியுள்ளது.

அத்துடன் விமானப்படையின் கண்காணிப்பை மீறி, ராடார் அவதானிப்புகளையும் தாண்டி இத்தகைய ஊடுருவல் இருக்க முடியுமெனின் உலகின் எந்த மூலையில் இருந்தும் இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்ய வாய்ப்பு இருக்குமே என்றும் தி.மு.க. மேலும் கூறியுள்ளது.

தி.மு.க.வின் தலைமைக் கழக செயலாளர் ஆற்காடு வீராசாமி நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் கூறுகையில், இதுகுறித்து மத்திய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அணுவாயுதமற்ற உலகம் புதுடில்லி மாநாடு தீர்மானம்

(டில்லி)

2010-ம் ஆண்டிற்கு முன்பாக அணு ஆயுதப் பரிசோதனைகள் யாவும் முற்றிலும் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், வழக்கமான படை வசதிகளின் எண்ணிக்கை குறைந்தபட்ச பாதுகாப்பு அளவுக்கு குறைக்கப்பட வேண்டும் என்றும் ராஜீவ் காந்தி நினைவிலான மனித குல நாகரிக முன்னேற்ற முன் முயற்சி மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

புதுடில்லியில் கடந்த ஞாயிறன்று நிறைவடைந்த இந்த மாநாட்டை ராஜீவ் காந்தி நினைவு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. திருமதி சோனியா காந்தி தலைமை வகித்த இந்த மாநாட்டில் 24 இராஜதந்திரிகள் உட்பட பல்வேறு சமாதான விரும்பிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அணு ஆயுதமே அற்ற ஒரு உலகத்தை சிருஷ்டிப்பதற்காக ராஜிவ்காந்தியால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை புதுப்பிப்பதே இந்த மாநாட்டின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட எட்டுப் பக்க பிரகடன அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன், நேபாளத்தின் பட்டராய் தன்சானியாவின் ஜுலியஸ் நியரேரே, நிக்காரகுவாவின் டானியல் ஓட்டோ உட்படப் பலரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

## தமிழகத்தில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டக் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரமாக்கப் பட்டிருப்பதாகவும், பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுறது இராமேஸ்வரத்தில் இருக்கும் இந்திய கப்பற்படை அதிகாரிகளோடும்காவற்துறைஅதிகாரிகளோடும் கடற்படையின் தெற்குப்பிரிவுத் தலைவர் வைஸ் அட்மிரல் சாள்ஸ் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இராமேஸ்வரம் அருகேயுள்ள உச்சிப்புளி கடற்படைத் தளத்திலிருந்து கெலிகப்டர் மூலம் தினமும் இருதடவை நடுக்கடலில் தேடுதல் நடத்தப்படுவதாக காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜாபர் ஷெரீப் கூறியுள்ளார்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் பதின் நான்கு சோதனைச் சாவடிகளும் கம்பியில்லாத் தந்திகள் மூலம் இணைக்கப்பட்டிருப்பதாகவும், இந்தக் காவலரண்களில் பணிபுரியும் காவலர்களுக்கு தானியங்கி ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மண்டபம் கடப்பு முகாமில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவதாகவும், சூரிய மறைவுக்குப் பின்னர் இங்கிருக்கும் எவரும் வெளியே செல்ல முகாம் அதிகாரிகளால் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

### டெனிஸ் வீராங்கனைக்கு கத்திக்குத்து

(ஹம்பேர்க்)

உலகின் பிரபல்யமான டெனிஸ் ஆட்டக்காரரான மொனிக்கா செலஸ் ஹம்பேர்க் நகரில் கடந்த வெள்ளியன்று கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கானார் ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் டெனிஸ் போட்டியொன்றில் கலந்து கொண்டிருந்த அவர் இடைவேளையின் போது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில் கூட்டத்திலிருந்து கத்தியுடன் திடீரெனத் தோன்றிய நபர் ஒருவரால் குத்தப்பட்டார். இதனால் படுகாயமடைந்த மொனிக்கா செலஸ் ரத்தம் கக்கிய நிலையில், டெனிஸ் கோர்ட்டில் சாய்ந்தார். 19 வயதுடைய மொனிக்கா உடனடியாக ஹம்பேர்க் மருத்துவமனைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார். இப்போது அவர்ஆபத்தான கட்டத்தைகடந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

## பாலத்தீனியருக்கு சுயாட்சி தீர்வுத்திட்டம் வரலாம்

### பாலத்தீன பேச்சாளர் நம்பிக்கை

[டெல்அவிவ்]

இரண்டு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு பலத்த முயற்சிக்குப் பின்னால் இசுரேலினால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் பிரதேசத்தில் பாலத்தீனியர்களுக்கு சுயாட்சி ஏற்படக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று தொடர்பாக இணக்கம் ஏற்படலாம் என்று பாலத்தீனியர்களின் சார்பிலான பேச்சாளர் திருமதி களன் அஷ்ராபி கூறியுள்ளார்.

## தமிழகத்தில் சமூகதரம்

## செய்தியாளருக்கு மதிப்புதர பொலிசார் பழகவேண்டும்

பொலிசாருக்குப் பயிற்சி வழங்கும் காலத்தில் பத்திரிகையாளருடன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும் கற்பிக்கப்பட வேண்டும் என்று பத்திரிகையாளர் மீது பொலிஸ்படையினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து விசாரணை செய்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ரியூடர் டி சில்வா தனிநபர் ஆணைக்குழு தனது அறிக்கையில் பத்திரிகையாளரின் அடையாள அட்டைகளுக்கு மதிப்புத்தரப் பொலிஸ் பழகிக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாராந்த அமைச்சரவை பத்திரிகையாளர் மாநாட்டின்போது பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு விடையளிக்க ஒரு மூத்த பொலிஸ் அதிகாரியும் சமுகம் தரவேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

## உணவு கொண்டுசெல்ல பொதுமக்களுக்குத் தடை

வாகரைப் பகுதிக்கு அத்தியாவசிய பொருள்கள் எடுத்துச்செல்ல சிறிலங்கா இராணுவத்தினர் கட்டுப்பாடு விதித்துள்ளதாகவும் போக்குவரத்திற்கு தடை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து வாகரைக்கு பஸ்சேவையை நடாத்தக்கூடாது என மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவை இராணுவம் கேட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வாழைச்சேனையில் இருந்தே வாகரைக்கு தற்போது காலையும், மாலையுமாக இருதடவை பஸ்சேவை நடத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை ஒருவர் ஒரு கொத்து அரிசி, அரைப் போத்தல்மண்ணெண்ணெய், இருதீப்பெட்டி, ஒருகிலோ சீனி என்ற அளவிலேயே கொண்டு செல்ல இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது. வியாபாரிகள் கூடகூடுதலான பொருள்களை வாகரைக்கு எடுத்துச்செல்ல இராணுவம் அனுமதி வழங்குவதில்லை. மீறிக் கொண்டு சென்ற சிலர் இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (ச)

ஸ்கொட்லன்ட் யார்ட்டின்

## லலித் கொலை விசாரணை பாதிக்கப்படமாட்டாது

ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாகவும் இலங்கை வந்துள்ள ஸ்கொட்லன்ட்யார்ட் குழுவினர் விசாரணையை நடத்துவதால் அவர்களின் லலித் கொலை தொடர்பான விசாரணைகளில் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படமாட்டாது என சிறிலங்கா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லலித் கொலை தொடர்பாக விசாரணை நடத்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஸ்கொட்லன்ட்யார்ட் துப்பறியும் குழுவினரை இலங்கைக்கு முன்னதாக அழைத்திருந்தமை தெரிந்ததே.

காத்தான்குடி

## பொலிஸ் நிலையம் விரைவில் இடம் மாறும்?

காத்தான் குடியில் இருக்கும் சிறிலங்கா பொலிஸ் நிலையம் விரைவில் இடம்மாற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அல்நாஸர் வித்தியாலயத்தில் இயங்கி வரும் பொலிஸ் நிலையம் விரைவில் இடம் மாற இருக்கும் இடத்தை பொதுமக்கள் மூலம் பொலிசார் துப்புரவு செய்வித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

## வசதியற்றோருக்காக வீடமைப்பு உதவி

தேசிய வீடமைப்பு அதிகார சபை தூய நிவாரணத்திட்டம் 1992 என்ற பெயரில் வீடற்ற வறிய மக்களை மாநகரசபை, பிரதேச சபைகளில் தெரிவு செய்து அவர்களுக்குஐயாயிரம் 'அவ்வப்பிரதேசங்களில்' உள்ள பொது அமைப்புகளிடம் விட்டுள்ள இவ் அதிகார சபை இறுதி முடிவை பிரதேச வீடமைப்புக்குழு ஒன்றை தெரிவு செய்து அதன் மூலம் எடுக்கின்

தெரிவிப்பதும், கொலையாயின் கண்டனம் தெரிவிப்பதும் எதிர்க்கட்சிகளின் வழமையான நடவடிக்கையாகும். ஆனால், சிறிலங்கா அரசியலைப் பொறுத்து ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டமைக்கு ஒப்புக்கேனும கவலையும், கண்டனமும் தெரிவிப்பதற்கு மூன்று நாட்கள் சென்றன. சனிக்கிழமை பிரேமதாசா கொல்லப்பட்ட போதும், திங்கட்கிழமையே தமது கவலையையும், கண்டனத்தையும் எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

போலித்தனமான இவ் 'ஜனநாயக மரபு' தனியாக பிரேமதாசாவின் மரணத்தின் போது மட்டும் உடைபட்டுப்போகவில்லை. அதற்கு முன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டபோதே உடைபட்டு விட்டது. எதிர்க்கட்சிகள் நாட்டின் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்த அனுமதி மறுத்ததில் இருந்தே அதை உடைத்து விட்டனர். இந்நிலையானது, பிலிப்பைன்ஸிற்கு அந் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மாக்கோசின் சடலத்தைகொண்டு வருவதற்கு அவரது எதிரியான அக்கினோ விதித்த தடைக்கு ஒப்பானதாகும்.

எதிர்க்கட்சிகள் என்றால் எதிரிகள் என்ற நிலை வெளிப்படையாகவே உருவாகிவிட்டது. இதை ஒத்தே ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான போக்குடைய சிங்கள பத்திரிகைகளும் சிங்கள பத்திரியையாளர்களும் நடந்துகொண்டன. திரு. பிரேமதாசாவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதில் தயக்கம் காட்டிய இப்பத்திரிகைகள் தனது செயலுக்குரிய தண்டனையை அவர் அனுபவிக்கின்றார் என்ற நிலையிலேயே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன.

இவ்வாறாக ஜனாதிபதி பிரேமதாசாவின் இழப்புக் குறித்து எதிர்க்கட்சிகள் ஜனநாயக மரபுகளை மீறியதற்கு உண்மையிலேயே ஜனாதிபதி பிரேமதாசா கடந்த காலத்தில் நடந்து கொண்ட சர்வாதிகார ரீதியான அணுகு முறையா, அன்றி அவர் மீதிருந்த காழ்ப்புணர்ச்சியா எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது விட்டாலும், அவை, சாதாரண மனித கோட்பாடுகளையும் 'ஜனநாயக மரபுகளையும்' துச்சமாக உடைத்தெறியும் அளவிற்கு பிரேமதாசாவை வெறுத்தனர் என்பதே நிதர்சனமாகும்.

ஆனால், தென்னாசியாவில் உள்ள ஏனைய நாடுகளில், திரு. பிரேமதாசாவிற்கு எதிர்பார்த்ததிற்கு மேலாக முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியாவில் கொடுக்கப்பட்டுள்ளமையானது, தனிமனிதனுக்கோ அன்றி ஜனாதிபதி பிரேமதாசாவிற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அல்ல. இது பிரேமதாசாவின் மரணத்தில் இந்தியா நடத்த முற்படும் அரசியலுக்காக கொடுக்கப்படும் முக்கியத்துவம் இதனை இந்திராகாந்தி கொல்லப்பட்டபோது சிறிலங்கா கொடுக்காத முக்கியத்துவத்தை பிரேமதாசாவின் மரணத்திற்கு இந்தியா கொடுப்பதில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும்.

இந்தியாவின் இந் நடவடிக்கையானது தென்னாசியப் பிராந்தியத்தின் முன்னணி நாடு எனத் தன்னைக் காட்ட விளைவதோடு, தென்னாசியப் பிராந்தியத்தில்நடைபெறும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களுக்கு எதிராக தனது வெளிப்பாட்டைக் காட்டும் நடவடிக்கையும் ஆகும். சுருங்கக் கூறின் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்க விரும்பும் இந்தியா, அம்முயற்சியில் ஈடுபட்டுள்ள சிறிலங்காவிற்கு நேரடியாகத் தெரிவிக்கும் ஆதரவு என்றே கொள்ளலாம்.

றது இராமேஸ்வரத்தில் இருக்கும் இந்திய கப்பற்படை அதிகாரிகளோடும்காவற்துறைஅதிகாரிகளோடும் கடற்படையின் தெற்குப்பிரிவுத் தலைவர் வைஸ் அட்மிரல் சாள்ஸ் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இராமேஸ்வரம் அருகேயுள்ள உச்சிப்புளி கடற்படைத் தளத்திலிருந்து கெலிகப்டர் மூலம் தினமும் இருதடவை நடுக்கடலில் தேடுதல் நடத்தப்படுவதாக காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜாபர் ஷெரீப் கூறியுள்ளார்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் பதின்நான்கு சோதனைச் சாவடிகளும் கம்பியில்லாத் தந்திகள் மூலம் இணைக்கப்பட்டிருப்பதாகவும், இந்தக் காவலரண்களில் பணிபுரியும் காவலர்களும் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவதாகவும், சூரிய மறைவுக்குப் பின்னர் இங்கிருக்கும் எவரும் வெளியே செல்ல முகாம் அதிகாரிகளால் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மடைந்த மொனிக்கா செலஸ் ரத்தம் கக்கிய நிலையில், டெனிஸ் கோர்ட்டில் சாய்ந்தார். 19 வயதுடைய மொனிக்கா உடனடியாக ஹம்பேர்க் மருத்துவமனைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார். இப்போது அவர்ஆபத்தான கட்டத்தைகடந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

# பாலத்தீனியருக்கு சுயாட்சி தீர்வுத்திட்டம் வரலாம்

## பாலத்தீன பேச்சாளர் நம்பிக்கை

[டெல்அவிவ்]

இரண்டு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு பலத்த முயற்சிக்குப் பின்னால் இசுரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தில் பாலத்தீனியர்களுக்கு சுயாட்சி ஏற்படக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று தொடர்பாக இணக்கம் ஏற்படலாம் என்று பாலத்தீனியர்களின் சார்பிலான பேச்சாளர் திருமதி களன் அஷ்ராபி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: மூன்று வெவ்வேறான குழுக்கள் இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இசுரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காசா பாலைவனப் பகுதியில் நான்கு பாலத்தீனியர்கள் இசுரேலியப்படையினரால் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

# தமிழகத்தில் சமூகதரம் தாழ்வுற்று வருகிறது

-டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

தமிழகத்தில் அரசியல், பொருளாதார சமூகத் தரம் தாழ்வுற்று வருவதாக ஜனதாக் கட்சித்தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

இந்த நிலைபற்றி தமிழக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கன்னியாகுமரியிலிருந்து திண்டுக்கல் வரை யாத்திரை ஒன்றை மேற்கொண்டிருக்கும் அவர் மேலும்கூறுகையில், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட மாநில அரசுக்கு மத்திய அரசு உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

களும் ஏற்படமாட்டாது என ... திருந்தமை தெரிந்ததே.

காத்தான்குடி

# பொலிஸ் நிலையம் விரைவில் இடம் மாறும்?

காத்தான் குடியில் இருக்கும் சிறிலங்கா பொலிஸ் நிலையம் விரைவில் இடம்மாற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அல்நாஸர் வித்தியாலயத்தில் இயங்கி வரும் பொலிஸ் நிலையம் விரைவில் இடம் மாற இருக்கும் இடத்தை பொதுமக்கள் மூலம் பொலிசார் துப்புரவு செய்வித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

# வசதியற்றோருக்காக வீடமைப்பு உதவி

தேசிய வீடமைப்பு அதிகார சபை தூய நிவாரணத்திட்டம் 1992 என்ற பெயரில் வீடற்ற வறிய மக்களை மாநகரசபை, பிரதேச சபைகளில் தெரிவு செய்து அவர்களுக்குஐயாயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்குகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ் மிகமிகஅவசிய வீட்டுத்தேவை உள்ள வறிய மக்களை அதாவது விதவைகள், உழைப்பாளிகளை இழந்த குடும்பத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அதேவேளை அவர்களுள் சொந்தமாக காணி உள்ளவர்களை மட்டுமே தெரிவு செய்துஇந்தஉதவியை வழங்கி வருகின்றது. இக் குடும்பங்களைதெரிவுசெய்யும் பணியை 'அவ்வப்பிரதேசங்களில்' உள்ள பொது அமைப்புகளிடம் விட்டுள்ள இவ் அதிகாரசபை இறுதி முடிவை பிரதேச வீடமைப்புக்குழு ஒன்றை தெரிவு செய்து அதன் மூலம் எடுக்கின்றது.

பிரதேச் வீடமைப்பு குழு அவ்வப் பிரதேசங்களின் பிரதேச செயலர்களின் தலைமையில் பிரதேச வீடமைப்பு அதிகாரி ஒருவரையும் சனசமூக நிலையங்களின் பிரதேச சம்மேளனத்தின் செயலாளர், சிக்கன கடனுதவு சங்கத்தின் பணிப்பாளர் போன்றோரையும் வேறு இருவரையும் கொண்டு உருவாக்கப்பட்டது. இப் பிரதேச வீடமைப்புக் குழு எடுக்கும் முடிவின் படி தெரிவு செய்யப்படுவோரின் பெயர்கள் பொது இடங்களில் மக்களின் பார்வைக்கு குறிப்பிட்ட நாட்கள் வைக்கப்பட்டு அப் பெயர்களுக்குரியவர்களின் தெரிவு பிழையாயின் தமக்கு அறிவிக்கும்படி கேட்கப்பட்டு பின் அவர்களுக்கு மேற்படி ஐயாயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படுகின்றது. [சி]

# சந்தை விலைவிபரம் (03-05-1993)

## யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 32.00 | 28.80 | 31.30 | 29.85 | 29 50 | 28.80 | 30.00 | 33.00 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 13.30 | 13.30 | 14.20 | 13.00 | 13.00 | 13.00 | 13.50 |
| 03. | சீனி | ,, | 40.00 | 39.65 | 41.35 | 43.30 | 41.00 | 38.00 | 40.65 | 42.00 |
| 04. | கத்தரி | ,, | 26.50 | 34.30 | 24.00 | 22.65 | 21.00 | 25.00 | 30.00 | 35.30 |
| 05. | வெண்டி | ,, | 35.00 | 34.65 | 24.00 | 20.00 | 19.00 | 26.65 | 34.65 | 35.00 |
| 06. | பாகல் | ,, | 32.50 | 44.65 | 38.30 | 32.50 | 39.00 | 50.00 | 42.65 | 42.30 |
| 07. | புடோல் | ,, | 15.50 | 22.30 | 21.30 | 17.65 | 33.00 | 20.00 | 20.00 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 38.00 | 40.65 | 35 00 | 34.30 | 22 00 | 35.00 | 42.65 | 35.00 |
| 09. | தக்காளி | ,, | 40 00 | 49.65 | 27.00 | — | 33.50 | 60 00 | 47.50 | — |
| 10. | வாழைக்காய் | ,, | 24.00 | 34.30 | 20.65 | 27.65 | 32.50 | 25.00 | 32 00 | 27.30 |
| 11. | பீற்றூட் | ,, | 17.00 | 24.65 | 18.00 | — | — | 20.00 | 24.50 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 30.00 | 27.30 | 23.50 | 26.00 | 25.25 | 22.50 | 22.30 | 16.50 |
| 13. | புச்சைமிளகாய் | கி.கி | 38.00 | 59.30 | 60.00 | 61.65 | 39.00 | 60.00 | 46.65 | 60.00 |
| 14. | எஞமிச்சை | ,, | 225.00 | 250.00 | 250.00 | 140.00 | 190.00 | 175.00 | 250.00 | 190.00 |
| 15. | வெங்காயம் | ,, | 24.50 | 29.30 | 20.30 | 18.75 | 23.25 | 17.50 | 18.65 | 20.05 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 30.00 | 35.30 | 30.00 | 30.00 | 31.00 | 40.00 | 30.00 | 30.00 |
| 17. | இறால் | ,, | 120.00 | 85.00 | 76.65 | 58 30 | 90.00 | — | 100.00 | — |
| 18. | பெரியமீன் | ,, | 142.50 | 156.25 | 85.00 | 105.00 | 131.25 | 112.50 | 75 00 | 150.00 |
| 19. | சிறியமீன் | ,, | 180.00 | 90.80 | 66.65 | 67.75 | 95.00 | 63.30 | 50.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 8.00 | 8.15 | 7.45 | 8.25 | 8.00 | 7.50 | 7.65 | 6.50 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## 'ஷெல்'லை

தெரியவருவதாவது; பலகாலமாக மூடிக்கிடந்த பழைய இரும்புக்கடை ஒன்றை திறந்து வியாபாரம் செய்யும் நோக்குடன் அதற்குள் கிடந்த இரும்புச் சாமான்களை அகற்றிக் கொண்டிருந்தபோது மேற்படி ஷெல் கிடப்பதைக் கண்டதும் அதை எடுத்து தூர எறிந்து பார்த்தனராம். பலமுறை எறிந்து பார்த்த பின் பலியானவர் அதை தனது வீட்டின் பின்புறம் எடுத்துச்சென்று அடித்து உடைக்க முயன்ற போதே அது வெடித்தது. பலியானவரின் தசைச்சிதறல்கள் அவர் இருந்த வீட்டுச் சுவரில் ஒட்டிக் கிடந்தன. தலையும் இருகால்களும் வேறு வேறு இடங்களில் கிடந்ததை காண முடிந்தது. (சி)

ஈழநாதம்

# ஜெயலலிதா கூறும் நேரத்தில்

# சென்னைக்கு மேல் விமானம் பறந்ததற்கு சான்றில்லை

## விமான நிலைய அதிகாரி தெரிவிப்பு

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீட்டிற்கு மேலாக மர்ம விமானம் பறந்ததாக தமிழக அரசு கூறும் அதிகாலை நேரத்தில் விமானம் ஏதும் சென்னைக்கு மேலாகப் பறந்ததற்கு சான்று ஏதுமில்லை என சென்னை விமான நிலைய உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலைய போக்குவரத்துக் கண்காணிப்பை மீறி எந்த ஒரு விமானமும் நகரின் மேல் பறக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

அதிகாலை 2 மணி முதல் 4 மணி வரை எந்தவித விமானமும் பறக்கவில்லை என்றும் விமான நிலைய கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். மாநில அரசு கூறியபடி வெளிச்சமின்றி எந்தரக கிளைடர் விமானமும் இருளில் பறந்திருக்கமுடியாது. சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தகவல் அளிக்காமல் எந்த விமானமும் நகரின் மேல் பறக்க முடியாது. அப்படிப் பறந்தாலும் அது உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டு விடும் என விமான நிலைய இயக்குனர் தெரிவித்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீட்டின் மேல் மர்ம விமானம் ஒன்று வட்டமிட்டதனால் அவரின் பாதுகாப்பிற்கு விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வேண்டும் என்று தமிழக அரசு கூறியிருந்ததும் விடுதலைப் புலிகள் ஜெயலலிதாவை விமானம் மூலம் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக தமிழகப் பொலிஸாரை மேற்கோள்காட்டி அ.தி.மு.கவினர் எச்சரித்திருந்ததும் தெரிந்ததே.

ஜெயலலிதா வீட்டுக்கு மேலாக

சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவில்
திருக்கோணமலை — யாழ்.மாவட்டக் கலைஞர்கள்
ஒன்றிணைந்து வழங்கும்

நவாலியூர்
சி. என். செல்லத்துரை
அவர்களின்

"தாயக மண்"

(கற்பனை கலந்த சரித்திர நாடகம்)

இடம் :- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
நேரம் :- பி.ப. 5.30 மணி
காலம் :- 06-05-93

அன்பளிப்பு: — 10 ரூபா
ரிக்கற்றுகள் மண்டபவாயிலில்
(4820)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்

முழுநிலா நாள்
அறிவியலரங்கு

காலம்: 06. 05. 1993 வியாழன் பிற்பகல் 3.30 மணி.
இடம்: குமாரசுவாமி மண்டபம்

## விமானம் பறந்தது என்பது வெறும் கட்டுக்கதை

(சென்னை)

ஜெயலலிதாவின் வீட்டிற்கு மேலாக மர்ம விமானம் பறந்ததாக வெளியிடப்பட்ட செய்தி வெறும்கட்டுக்கதையே

பிரிவினர் தமது கண்காணிப்பை மீறி எந்த விமானமும் பறக்க முடியாது என்றும் கிளைடர் விமானம் ஏதும் இரவு 8 00 மணிக்கு மேல்

## ஆசிரியர் பிணைமுறிப் படிவம்

1991, 92 ஆம் ஆண்டுகளில் ஆசிரிய கல்வியைப் பூர்த்தி செய்துவிட்டுப் பாடசாலைகளுக்குச் சென்றவர்களில் பிணை முறிப் படிவம் பெற்றுக்கொள்ளாதவர்கள் தமக்குரிய படிவத்தை இம்மாதம் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் கையொப்பமிட்டு உப அதிபர் திருமதி சி. இராமநாதன் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாமென கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## இந்து - முஸ்லிம் கலவரம் மணிப்பூரில் 100 பேர் பலி

(இம்பால்)

இந்தியாவின் வடகிழக்கு மாகாணமான மணிப்பூரில் இடம்பெற்றஇந்து-முஸ்லிம்கலவரத்தில் இருதினங்களில் மட்டும் நூற்றுக்குமேற்பட்டோர் பலியாகியுள்ளனர். நூற்றைம்துக்கும் அதிகமானோர் காயப்பட்டுள்ளனர் நிலைமையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர இரண்டாயிரம் இராணுவ வீரர்களை மாநிலத்துக்கு அனுப்பிவைக்கும்படி மாநில அரசு மத்திய அரசை கோரியுள்ளது.

தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட சண்டையே இக்கலவரத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியின் கொலைக்கு சபாநாயகர் கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட செயலானது தனிப்பட்ட முறையில் மாத்திரமல்ல, நாட்டின் தலைவர் ஒருவருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட சதிச் செயலாகும். அரசாங்கத்திற்கும், நாடு முழுவதுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான செயலாகும் என்று சபாநாயகர் எம். எச். முகம்மது நேற்றுக்காலை பாராளுமன்றில் வெளியிட்ட விசேட அறிக்கையில் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும்கூறுகையில், எந்தவொரு நாட்டின் தலைவர் மரணமடைந்தாலும் அது இன, மத அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பிரஜைகள் அனைவரையும் பாதிக்கின்றது ஜனாதிபதியின் கொலைக்கு முன்பாகவும் சில கொலைகள் நிகழ்ந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக சமீபத்தில் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டார். இவை யாவும் சம அளவில் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். இத்தகைய கொடூரமான நடவடிக்கைகள்மீண்டும் தொடராமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## சிந்தனையைச் செயற்படுத்த இரவுபகலாக உழைத்தவர்

### ஜே. ஆர். இரங்கலுரை

பிரேமதாசா தனது சிந்தனைகளைச் செயற்படுத்த இரவுபகலாக உழைத்துள்ளார் இவர் அரசியல் ஆளுமை உடையவர். அவரின் செயற்பாடுகளை இந்தக் கொலையினால் வறிய மக்கள் இழந்துள்ளனர். இவ்வாறு நடந்திருக்கா விட்டால் அவரின் சேவையை பல வருடங்கள் பெற்றுக்கொண்டிருப்பர். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெயலலிதாவிற்கு போதிய பாதுகாப்பு மத்திய அரசு வழங்கும்

### - நரசிம்மராவ்

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மத்திய அரசு போதுமான பாதுகாப்பை அளிக்குமென பிரதமர் நரசிம்மராவ் உறுதியளித்துள்ளார் என அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன. சென்னையில் ஜெயலலிதாவின் வீட்டிற்கு மேலாக மர்ம விமானம் சுற்றியதையடுத்து அவருக்கு பாதுகாப்பை பலப்படுத்தக் கோரி நேற்றுமுன்தினமிரவு அ. தி. மு.க பிரதிநிதிகள் குழு ஒன்று புதுடில்லியில் நரசிம்மராவை சந்தித்தது.

இச்சந்திப்பின் போதே பிரதமர் மேற்கண்ட உறுதிமொழியை அளித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து பிரதமருடன் அ.தி மு க குழுவினர் 15 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினர். மர்ம விமானம் ஜெயலலிதாவின் வீட்டிற்கு மேலாக சந்தேகத்திற்கிடமான முறையில் வட்டமிட்டதாக கூறி பாதுகாப்பிற்காக விமான எதிர்ப்பு பீரங்கிகளை தருமாறும் வீட்டின்மேல் விமானம் பறக்க தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கவேண்டும் எனவும் இதனை இராணுவம் கண்காணிக்க வேண்டும் எனவும் அ. தி மு கவினர் பிரதமர் நரசிம்மராவிடம் கோரிக்கை விடுத்தது தெரிந்ததே.

அத்துலத்முதலி கொலை வழக்கு

## சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது யார்?

(கொழும்பு)

கிருலப்பனையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி சுடப்பட்ட இடத்துக்கு அண்மையாக முகலன் வீதியில் கிடந்த சடலத்திற்கு அருகே காணப்பட்ட அடையாள அட்டை போலியானது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருப்பதால் அது யாருடைய சடலம்? அது எவ்வாறு அந்த இடத்துக்கு வந்தது? என்பதைமுதலில் கண்டறியவேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். எல் எம். அமீன் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் பதில் பிரதம நீதிவான் எம்.ஏ. சில்வா முன்னிலையில் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

லலித் அத்துலத்முதலியின் கொலை குறித்த பூர்வாங்க விசாரணையின்போது அத்துலத்முதலி தரப்பின் நலன்களைக் கவனிக்க அமீன் ஆஜரானார். அமீன் இவ்வாறு கூறியதும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி மொஹான் பீரிஸ் 'முகலன் வீதியில் கிடந்த சடலம் அப்பையா பாலகிருஷ்ணனுடையதா? அல்லது வேறு யாருடையதா? கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையில் படம் ஒட்டப்பட்டுள்ளதாகவே அறிவிக்கப்படுகின்றது. இப்பொழுது விசாரணை நடை பெற்றுக்கொண்டிருப்பதால் அவசரப்படாமல் அமைதியாக இருக்கவேண்டும்என்றார்

இவ்விசாரணைக்கு அழைக்கப்படவேண்டிய சாட்சிகளின் பெயர்களை அமீன் தந்தால் அவர்களை அழைக்கமுடியும் என்று அரச சட்டத்தரணி கூறியபோது சாட்சிகள் வருவார்களா? அவர்களின் பாதுகாப்பு? அவர்கள்பயந்தேயிருக்கிறார்கள் என்று அமீன் குறிப்பிட்டார். இக்கட்டத்தில் அமீனுடன் ஆஜராகும் இன்னுமொரு சட்டத்தரணி குறுக்கிட்டு லலித்தின் கொலை தொடர்பாகத் தகவல் தெரிவிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள் எனத் தெரிவிக்கப்பட்ட இலக்கங்களைச் சுழற்றினால் எவரும் தொலைபேசியை மறுமுனையில் எடுக்கிறார்கள் இல்லை என்று கூறப்படுகிறது என்றும் தெரிவித்தார்-

தற்கொலைப்படை.

ரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீன் இக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டமைதெரிந்ததே.

ஜே. ஆர்

மாளிகையில் பிரேமதாசாவின் உடல்தாங்கிய பிரேதப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது. பிரேமதாசாவினால் அண்மைக்காலங்களில் திறந்து வைக்கப்பட்ட ஆடைத்தயாரிப்புத் தொழிற்சாலை ஊழியர்களும் அஞ்சலி செலுத்த ஏற்பாடாகியுள்ளது.

பிரேமதாசாவின் அகால மறைவிற்கு அஸ்கிரிய பீடாதிபதியும் அனுதாபச் செய்தி விடுத்துள்ளார்.

சுதந்திரப்

பெண்கள் எதிர்நோக்கும் இடர்கள், சிறுகதை போன்ற

பயிலுநர்

லுநர்களின் மாதாந்த ஊதியம் 2000 ரூபாவாக இருப்பதால்

நேரம் :- பி.ப. 5.30 மணி
காலம் :- 06-05-93

அன்பளிப்பு:- 10 ரூபா
ரிக்கற்றுகள் மண்டபவாயிலில்

(4820)

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்

## முழுநிலா நாள் அறிவியலரங்கு

காலம்: 06. 05. 1993 வியாழன் பிற்பகல் 3.30 மணி.

இடம்: குமாரசுவாமி மண்டபம்

3-30 – 4-30 ''வடக்குக் கிழக்கு பிரதேச புவியியல் அமைவு''
திரு. செ. பாலச்சந்திரன்
தலைவர், புவியியற்றுறை
யாழ். பல்கலைக் கழகம்

4-30 – 5-30 "கணனி ஓர் அறிமுகம்"
திரு. சோ. கண்ணன்
உதவி விரிவுரையாளர்
கணனி விஞ்ஞானத்துறை
யாழ். பல்கலைக் கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
பழைய மாணவர் சங்கம், செயலாளர்
யா. இ. க.
(சி. 6565)

---

உ
சிவமயம்

நீர்வையூர், கோவையூர்,
உரும்பராய் கிழக்கு, திருக்கரந்தனூர்
அருள்மிகு சிவபூத நாதேஸ்வர சுவாமி ஆலய

## மஹோற்சவம்

மேற்படி தேவஸ்தானத்தின் முதலாவது மஹோற்சவம்
நாளை மறுதினம்
வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு
துவஜாரோகண உற்சவத்துடன் ஆரம்பமாகி 15 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

மஹோற்சவ குரு: ''சிவஞான பாஸ்கரன்'' ''குருவம்ச சிகாமணி'' சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு) அவர்கள் கிரியைகளை நடத்தி வைப்பார்.

7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 14 தினங்களும் மஹோற்சவ கால தெய்வீகப் பேருரைகளை
தினசரி மாலை 7-30 மணிமுதல் 8-30 மணிவரை
சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)
அவர்கள் நிகழ்த்துவார்.

அடியார்களை உற்சவத்தில் பங்கு கொண்டு அருள் பெற்றுய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

[4822] - நிர்வாகம்

---

ன் வீட்டின் மேல் மர்ம விமானம் ஒன்று வட்டமிட்டதனால் அவரின் பாதுகாப்பிற்கு விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வேண்டும் என்று தமிழக அரசு கூறியிருந்ததும் விடுதலைப் புலிகள் ஜெயலலிதாவை விமானம் மூலம் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக தமிழகப் பொலிஸாரை மேற்கோள்காட்டி அ. தி.மு.கவினர் எச்சரித்திருந்ததும் தெரிந்ததே.

... அறிக்கையில் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும்கூறுகையில், எந்தவொரு நாட்டின் தலைவர் மரண

ஜெயலலிதா வீட்டுக்கு மேலாக

## விமானம் பறந்தது என்பது வெறும் கட்டுக்கதை

(சென்னை)

ஜெயலலிதாவின் வீட்டிற்கு மேலாக மர்ம விமானம் பறந்ததாக வெளியிடப்பட்ட செய்தி வெறும்கட்டுக்கதையே என தமிழக காங்கிரஸ் கட்சி தலைமை கருத்துக் கூறியுள்ளது. கட்சி நேற்று மாலை விடுத்த அறிக்கையில், மக்களின் நம்பிக்கையை இழந்துள்ள ஜெயலலிதா அரசு அனுதாபம் பெறுவதற்காக இத்தகைய செய்திகளை பரப்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்து பிரிவினர் தமது கண்காணிப்பை மீறி எந்த விமானமும் பறக்க முடியாது என்றும் கிளைடர் விமானம் ஏதும் இரவு 8 00 மணிக்கு மேல் பறக்கமுடியாது என்றும் கூறியுள்ளனர். என்றும் சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கையில், இச்செய்தியை உறுதிப்படுத்த முன் மாநில அரசின் தலைமை செயலாளர் உயரதிகாரிகளுடன் இதுபற்றி ஆலோசிப்பதும், மத்திய அரசிடம் பாதுகாப்பு கோருவதும் முறையற்றது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

## மண்டபம் அகதிமுகாமில் பொலிசார் சோதனை

(சென்னை)

இராமநாதபுரம் மண்டபம் அகதிகள் முகாமில் நேற்று அதிகாலை தமிழக பொலிசார் கடும் சோதனை நடத்தினர். இச்சோதனையின்போது முகாமிலிருந்த அகதிகளின் அடையாள அட்டை அவர்களின் சொந்தப்பொருள்கள் என்பன பொலிசாரின் தீவிர சோதனைக்கு உள்ளாகின.

அனுமதியின்றி எவரேனும் தங்கியுள்ளனரா என்பதை அறிய முகாமினுள் இருந்த வீடுகள் அனைத்தும் சோதனையிடப்பட்டதாக மாவட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## தடா கைதிகளைத் தேடி காடுகளில் தேடுதல்

(சென்னை)

மண்டா அருகே தப்பிச் சென்ற 3 தடா கைதிகளையும் அவர்களை மீட்டவர்களையும் தேடி தமிழக-கர்நாடக பொலிசார் இணைந்து தேடுதல் நடத்திவருவதாக தமிழக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தப்பியோடிய கைதிகள் சின்ன தண்டா காட்டுப்பகுதியினுள் மறைந்து விட்டதாகவும அவர்கள் தப்பியோட முடியாதபடி தமிழக-கர்நாடக எல்லையில் உள்ள எல்லா வீதிகளும் மூடப்பட்டுள்ளதாகவும் காட்டின் உட்பகுதி மற்றும் மலையில் உள்ள கிராமங்களில் பொலிசார் தேடுதல் நடத்திவருவதாகவும் தமிழக உயர் பொலிஸ் அதிகாரி தேவாரம் குறிப்பிட்டார்.

## இந்திய ராணுவத்திற்கு வீரப்பன்சவால்

கர்நாடக-தமிழக எல்லை காட்டுப்பகுதியில் தலைமறைவாக இருந்துவரும் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் (வயது 43) இந்திய இராணுவத்திற்கு சவால் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ''இராணுவமே வந்தாலும் என்னை எதுவும் செய்யமுடியாது'' என வீரப்பன் சவால் விடுத்துள்ளார்.

இவரை கைது செய்ய உதவுவோருக்கு 30 இலட்சம் ரூபா சன்மானம்வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்துள்ளது தெரிந்ததே. தற்போது வீரப்பன் மறைந்திருப்பதாக கருதப்படும் காட்டுப்பகுதியில் தமிழக-கர்நாடக பொலிசார் இணைந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

---

தொடராமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## சிந்தனையைச் செயற்படுத்த இரவுபகலாக உழைத்தவர்

ஜே. ஆர். இரங்கலுரை

பிரேமதாசா தனது சிந்தனைகளைச் செயற்படுத்த இரவுபகலாக உழைத்துள்ளார் இவர் அரசியல் ஆளுமை உடையவர். அவரின் செயற்பாடுகளை இந்தக் கொலையினால் வறிய மக்கள் இழந்துள்ளனர். இவ்வாறு நடந்திருக்கா விட்டால் அவரின் சேவையை பல வருடங்கள் பெற்றுக்கொண்டிருப்பர். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலைப்பொறுத்தவரை பிரேமதாசா தனது பழைய நண்பனாக சகபாடியாக இன்னமும் இருப்பதாகத் தாம் ஏற்கனவே கூறியிருந்தமையை ஜெயவர்த்தனா தனது செய்தியில் நினைவுபடுத்தியுள்ளார். அவரின் மறைவினால் இந்த உறவும் பிரிக்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதியின் மறைவுச் செய்தியைக் கேட்டு தாம் புதுடில்லியில் இருந்து நாடு திரும்பியதாகவும் ஜெயவர்த்தனா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

டம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீன் இக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டமைதெரிந்ததே.

### ஜே. ஆர்

மாளிகையில் பிரேமதாசாவின் உடல்தாங்கிய பிரேதப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது. பிரேமதாசாவினால் அண்மைக்காலங்களில் திறந்து வைக்கப்பட்ட ஆடைத்தயாரிப்புத் தொழிற்சாலை ஊழியர்களும் அஞ்சலி செலுத்த ஏற்பாடாகியுள்ளது.

பிரேமதாசாவின் அகால மறைவிற்கு அஸ்கிரிய பீடாதிபதியும் அனுதாபச் செய்தி விடுத்துள்ளார்.

### சுதந்திரப்

பெண்கள் எதிர்நோக்கும் இடர்கள், சிறுகதை போன்ற பல அம்சங்களை உள்ளடக்கி வெளிவருகின்றது.

### சிங்கள

இதேவேளை ஜனாதிபதி கொலையில் தொடர்புடைய தற்கொலைப் படைவீரர் காங்கேசன் துறையைச் சேர்ந்தவர் என்றும் இவர் மூன்று லொறிகளுக்கு உரிமையாளர் என்றும் இந்த லொறிகள் மூலம் உணவுப் பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு செல்பவர் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

பெயர்களை அமீன் தந்தால் அவர்களை அழைக்கமுடியும் என்று அரச சட்டத்தரணி கூறியபோது சாட்சிகள் வருவார்களா? அவர்களின் பாதுகாப்பு? அவர்கள்பயந்தேயிருக்கிறார்கள் என்று அமீன் குறிப்பிட்டார். இக்கட்டத்தில் அமீனுடன் ஆஜராகும் இன்னுமொரு சட்டத்தரணி குறுக்கிட்டு லலித்தின் கொலை தொடர்பாகத் தகவல் தெரிவிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள் எனத் தெரிவிக்கப்பட்ட இலக்கங்களைச் சுழற்றினால் எவரும் தொலைபேசியை மறுமுனையில் எடுக்கிறார்கள் இல்லை என்று கூறப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

### பயிலுநர்

லுநர்களின் மாதாந்த ஊதியம் 2000 ரூபாவாக இருப்பதால் இவர்களுக்கு 30 சதவீத சம்பள உயர்வாக 600 ரூபா வழங்கப்படவேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகங்களாலும், திறந்த பல்கலைக்கழகத்தாலும், தேசிய கல்வி நிறுவனத்தாலும் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சிநெறிக்கு பட்டதாரிப் பயிலுநர் தோற்ற அனுமதி வழங்கவேண்டும் என்ற ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரையே கல்வியமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்தது.

---

தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

## உபபரிசோதகர்/காவலர் தரங்கள்

**கல்வித் தகைமைகள்:-**
**8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த [உயர்தரம்] வரை**

**உயரம்:- 5' 6"**
**வயது:- 18 தொடக்கம் 30 வரை**

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 15.05.93ந் திகதி வரை பழைய பூங்கா காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்வுக்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

[சி-6561]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் (5-ம் திகதி அச்சிட்டு) வெளியிடப்பட்டது.